தமிழ் இலக்கியங்களில்

# உறவு முறைகள்




பதிப்பாசிரியர்

முனைவர் கு.வெங்கடேசன்

முனைவர் சு.சதாசிவம்

கவிஞர் பா.சம்பத்குமார்

# தமிழ் இலக்கியங்களில் உறவுமுறைகள்


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கு. வெங்கடேசன்<br>முனைவர் சு. சதாசிவம்<br>கவிஞர் பா. சம்பத்குமார் |
| பொருள் | : | ஆய்வுக்கட்டுரைகள் |
| உரிமை | : | பதிப்பாசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2014 |
| வெளியீடு | : | செம்மூதாய் பதிப்பகம்<br>ஏ3, அபிராமி நிவாஸ், 43 வால்மீகி தெரு<br>கிழக்குத் தாம்பரம், சென்னை - 600 059.<br>கைபேசி : 9444200369 / 9444327963 |
| கணினி | : | செந்தமிழ் தட்டச்சு மையம், சென்னை - 63. |
| அச்சாக்கம் | : | மணி ஆப்செட், திருவேற்காடு, சென்னை-77. |
| பக்கங்கள் | : | XX + 1 - 646 |
| விலை | : | உரு. 500 /- |

ISBN : 978 - 93 - 81006 - 76 - 4


**TAMIL ELAKKIANGALIL URAVU MURAIGAL**


| | | |
|---|---|---|
| Editors | : | **Dr. K. Venkatesan, Dr. S. Sathasivam<br>Kavignar P. Sampathkumar** |
| Copyright | : | Editors |
| First Edition | : | March, 2014 |
| Published | : | **Semmoodhai Pathippagam**<br>A3, Abirami Nivas, 43 Valmiki Street<br>East Tambaram, Chennai-600 059.<br>Cell : 944200369 / 9444327963 |
| Computer | : | **Senthamizh Typing Centre**, Chennai-63. |
| Printing at | : | **Mani Offset**, Thiruverkadu, Chennai-77. |
| Pages | : | XX + 1 - 646 |
| Price | : | **Rs. 500/-** |

136. சிவராமன் .ரா
கம்பனின் நட்பும் வள்ளுவனின் நட்பும்-ஓர் சிந்தனை 527

137. முனைவர் பா. செல்லம்மாள்
குறுந்தொகையில் தலைவி - தோழி உறவுமுறைகள் 531

138. முனைவர் தி. லெட்சுமி
திருவிளையாடற்புராணத்தில் 535
இயற்கையும் பெண் உறவும்

139. ச. தமிழரசி
முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளை ஓர் ஆய்வு 539

140. முனைவர் வா.ரா. விஜயலெட்சுமி
புறநானூற்றில் மனித உறவுகள் 543

141. வே. செந்தில் ஆறுமுகம்
சங்க காலத்தில் பெண்கள் உறவுமுறைகள் 547

142. முனைவர் இரா. ஜாக்குலின் இசபெல்லா
எட்டுத்தொகையில் உறவுமுறையும் நாகரிகபண்பாடும் 551

143. பா. ஸ்ரீரெங்கநாதன்
குறுந்தொகையில் தலைவன் - பாங்கன் நட்புறவு 555

144. செ. சாந்தி
குறுந்தொகையில் தலைவி தோழி உறவுநிலை 559

145. க.ரேவதி
பாவண்ணன் படைப்புகளில் உறவுமுறைகள் 563

146. ச. வேல்முருகன்
புறநானூற்றில் கவிமகனும் திருமகனும் 566

147. த. மகேஸ்வரி
புறநானூற்றில் கலைஞர்களும் வள்ளல்களும் 570

148. கவிஞர் உதயநிலவு அ. நிஜாம்
நல்லதங்காள் கதைக்கருவில் உருவான 574
திரை இசைப்பாடல்கள்

149. முனைவர் வே. மணிகண்டன்
சென்ரியூ கவிதைகளில் உறவு முறைகள் 578

150. தா. பேகம்
சு. சமுத்திரம் புதினத்தில் குடும்ப உறவுகள் 582

151. பெ. அசோகன்
சீ.ஆர்.ரவீந்திரன் புதினத்தில் உறவுகள் 586

# 145. பாவண்ணன் படைப்புகளில் உறவுமுறைகள்

**க. ரேவதி**
*உதவிப்பேராசிரியர்*
*பாத்திமாக் கல்லூரி*
*மதுரை - 18.*

## முன்னுரை

கூடி வாழும் மனித வாழ்வின் மாற்றங்கள் ஏற்றத்தையும் ஏமாற்றத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது. குடும்பம் என்னும் வேர் தாங்கும் விழுதுகளாய்த் திகழ்பவை உறவுகள் எனில் அது மிகையாகாது மாறிவரும் உலகில் உறவுகளின் உணர்வுகள் மட்டுமல்ல உறவுகளே புறந்தள்ளப்பட்டு வரும் சூழலில் உறவுகளின் பலத்தை இலக்கியங்களில் அவர் செய்யத் தவறவில்லை. சமூகத்தை மையமிட்டு எழுதும் படைப்பாளர்களில் ஒருவர் பாவண்ணன் இவரது படைப்புக்களின் வழி உறவுகளின் பிணைப்பை, பிரிவை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மனித உறவுகள்

ஒரு மனிதனுக்கும், இன்னொரு மனிதனுக்கும் ஏற்படும் தொடர்பு உறவுக்கு வழிவகுக்கும். அன்பு, பாசம், இரக்கம் உறவாகப் பரிணமிக்க உதவுகிறது. கணவன் மனைவி, தாத்தா, பாட்டி, மகன், மகள், நட்பு என உறவின் எல்லை விரிந்து கொண்டே செல்கிறது. பாவண்ணனின் படைப்புக்களில் உறவுகளின் பரிவும் பிரிவும் பேசப்படுகின்றது.

## கணவன் - மனைவி

குடும்பம் என்ற சமூக நிறுவனத்தின் தலைமை உறுப்பினர்களே கணவனும் மனைவியும். இவர்களின் உறவு அன்பால் பிணைக்கப் பட்டிருக்கின்றது. 'மேடுகள் பள்ளங்கள்' என்னும் கதையில் சகோதரிக்கு பணம் அனுப்ப வேறுவழியின்றி 200ரூபாய்க்கு வாடகை வீட்டை மாற்றி 100ரூபாய் கொடுத்து வாடகை வீட்டில் குடியேற அங்கே அடிப்படை வசதிகள் இல்லை. மனைவி அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறாள். அவளுக்காக,

> *"குடங்களை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கி நடந்தான். அவளுக்காக கஷ்டம் பகிர்வதில் நிம்மதியாகவே இருந்தது."*

என்று கதை முடிகின்றது. கணவனுக்காக மனைவி கஷ்டஜீவனத்திற்கு உட்பட கணவன் அதில் உதவி செய்து திருப்தி அடைகிறான். கதைக்கு மட்டுமல்ல பொரளாதாரத் தேவைமிகுந்துவரும் இன்றைய சூழலில் கணவனுக்கு ஏற்ப மனைவியும், மனைவிக்கு ஏற்ப கணவனும் விட்டுக்கொடுத்தால் வாழ்க்கை நன்றாக இருக்கும்.